பக்கங்கள் 17

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 27 புதன்கிழமை 13.09.2023 அதிர்வு 44

## திருவிழாவுக்குச் சென்றவர்களின் வீட்டில் 53 பவுண் நகைகள் களவு

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் 53 பவுண் நகை மற்றும் 100 அமெரிக்கன் டொலர் என்பன திருடப்பட்டுள்ளன. 04

# பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இன்று தேரேறி வந்தான் யாழ். நல்லூரான்!

(பிரபாகரன் டிலக்சன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத் தேர்த் திருவிழா இன்று காலை நடைபெற்றது.

காலை 6.15 மணியளவில் ஆரம்பமான வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து ஆறுமுகப்பெருமான் வள்ளி – தெய்வானை சமேதரராய் காலை 7 மணியளவில் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

தொடர்ந்து வள்ளி – தெய்வானை சமேதரராய் தேரில் வெளி வீதி உலா வந்த 04



# மோடியை ஒன்றாக சந்திக்க முயற்சிப்போம் வாருங்கள்!


## தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் அழைப்பு



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 13.

“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை ஒன்றாகச் சென்று சந்திக்கும் முயற்சியை மேற்கொள்வோம் வாருங்கள். அவர் நிச்சயமாக எங்களை சந்திக்கச் சம்மதிப்பார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார் 04



## வல்லிபுர ஆழ்வார் வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம்!



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை காலை 8.45 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 16 நாள்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெண்ணைத் திருவிழாவும், 23ஆம் திகதி துகில் திருவிழாவும், 04

## பதுளை ரயில் தடம் புரண்டது

(செ.தி.பெருமாள்)

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த ரயில் வட்டகொட ரயில் நிலையத்திற்கு அருகாமையில் இன்று மதியம் 2.45 மணியளவில் தடம்புரண்டது.







# சட்டவிரோத மீன்பிடிக்கு எதிர்ப்பு திருமலையில் இன்று போராட்டம்

(திருகோணமலை நிருபர்கள்)

சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதைத் தடை செய்யக் கோரியும் திருகோணமலையில் உள்ள மீனவர்களால் இன்று காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

சிறிமாபுரத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி திருக்கடலூர் வழியாக ஏகாம்பரம் வீதியூடாக வந்து திருகோணமலை - கண்டி பிரதான வீதியிலுள்ள மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்துக்கு முன்பாக வந்தடைந்தது. அங்கு மீனவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு வீதியில் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தில் 176 பேருக்கு வழங்கப்பட்ட சுருக்கு வலை அனுமதியை இரத்துச் செய்ய வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தச் சுருக்கு வலையால் கடல் வளம் அழிந்து போகின்றது எனவும், மீனவர்களின் தொழில் அற்றுப் போகின்றது எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் அரச அதிகாரிகள் தெரிந்திருந்தும் எதுவித சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

# பொலிஸ் உத்தியோகத்தராக நடித்த பெண்மணி கைது!


தம்மைப் பொலிஸ் உத்தியோகத்தர் என அறிமுகப்படுத்தி பண மோசடியில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் பொரளை பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். 24 வயதுடைய இந்தப் பெண் கல் கிஸ்ஸை பகுதியிலுள்ள தனியார் காப்புறுதி நிறுவனமொன்றில் பணி புரிந்து வந்தவர் எனப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மொரட்டுவை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இந்தப் பெண் சம்பந்தப்பட்ட முறைப்பாட்டாளர்களிடம் இரண்டு சந்தர்ப்பங்களில் பணத்தை பெற்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் சந்தேகநபரான இந்தப் பெண் போலி அடையாள அட்டை மற்றும் பொலிஸ் தலைமையகத்தின் முகவரியில் தயாரிக்கப்பட்ட போலி ஆவணம் என்பவற்றின் படங்களை வட்ஸ்அப் மூலம் முறைப்பாட்டாளர்களுக்கு அனுப்பியுள்ளமையும் தெரிய வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# மீண்டும் மீண்டும் விசாரணைக் குழுக்களை அமைத்து நாட்டை மேலும் வங்குரோத்தடையச் செய்ய வேண்டாம்

## சர்வதேச விசாரணையே வேண்டுமென ஜனாதிபதியிடம் சுரேஷ் இடித்துரைப்பு





"தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல், அத்துடன் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை நிராகரிப்பதாகவும் இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் அனைத்து பரிந்துரைகளையும் நிராகரிப்பதாகவும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது. அரசின் இத்தகைய செயற்பாடுகள் நாட்டை மேலும் வங்குரோத்து நிலைமைக்கே இட்டுச் செல்லும்."

– இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலில் 269 பேர் கொல்லப்பட்டதுடன் பல நூறு பேர் காயமடைந்துள்ளனர். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்த காலகட்டத்திலேயே இந்தத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 45பேரும் கொல்லப்பட்டனர். இதனால் சுற்றுலாத்துறையே பாரிய வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக பல நூறு மில்லியன் ரூபாய் அரசுக்கு இழப்பும் ஏற்பட்டது. இது பற்றி விசாரணைகளை நடத்துவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றும், நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுக்களின் அறிக்கைகள் முழுமையாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ வெளியிடப்படவில்லை. அவற்றை முழுமையாக வெளியிட முடியாது என்று கூறியும் இருந்தனர்.

பின்னர் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக வந்தபோது அவரும் ஒரு விசாரணைக்குழுவை நியமித்தார். அதிலும் எத்தகைய வெளிப்படைத்தன்மையும் இல்லை. மக்களுக்கும் அது பற்றி எதுவும் தெரியாது.

இப்போது மூன்றாவது முறையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க இருப்பதுடன், நீதிபதிகளை உள்ளடக்கிய மற்றொரு விசாரணைக் குழுவையும் நியமிக்கவுள்ளார். ஜனாதிபதியானவர் பாதுகாப்புத்துறையின் அமைச்சராகவும் இருக்கின்றார். ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக சனல் 4 வெளியிட்ட ஆவண வீடியோவைப் பாதுகாப்பு அமைச்சு முற்றாக நிராகரிப்பதாகக் கூறியுள்ளது. இந்நிலையில், ஒருபுறம் உயிர்த்த ஞாயிறு தினக் கொலைகளை முற்றுமுழுதாக நிராகரிக்கும் ஜனாதிபதி மறுபுறத்தில் அதற்கான விசாரணை ஆணைக்குழுக்களை நியமிப்பது வேடிக்கையாகவும் முரண்நகையாகவும் இருக்கின்றது.

ஏற்கனவே சிங்களத் தரப்பில் பல்வேறு கட்சித் தலைவர்களும் பொது அமைப்புகளின் தலைவர்களும் தமிழர் தரப்புகளும் சர்வதேச விசாரணையைக் கோரியுள்ள ஒரு சூழ்நிலையில், மீண்டும் மீண்டும் பல மில்லியன் ரூபா மக்களின் வரிப்பணத்தைச் செலவு செய்து, விசாரணைக்குழுக்களை அமைப்பது அர்த்தமற்றதும் காலத்தை வீணடிக்கும் செயலுமாகும். அதே சமயம் ஜனாதிபதியின் தலைமையில் இயங்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் சர்வதேச விசாரணையை நிராகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே இந்த விசாரணைகள் என்பது குறுகிய அரசியல் இலாப நோக்கங்களுக்காகச் செயற்படுத்தப்படுகின்றதா? அல்லது இந்த நாட்டின் கௌரவம் சர்வதேச அளவில் பாதுகாக்கப்பட வேண்டும், இந்த நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கு சர்வதேச முதலீடுகள் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்ற விடயத்தையாவது குறைந்த பட்சம் கவனத்தில் எடுத்துக்கொண்டு முன்னெடுக்கப்படுகின்றனவா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

ஜனாபதியின் ஆணைக்குழுக்களின் ஊடாக இலங்கை மீது சர்வதேச நம்பகத்தன்மையை உருவாக்க முடியாவிட்டால் இலங்கை இழந்துபோன கௌரவத்தை மீளப்பெற முடியாவிட்டால், இந்த விசாரணைக் கமிஷன்களெல்லாம் அர்த்தமற்றதாகிவிடும்.

யுத்தத்திற்குப் பின்னர், போர்க் குற்றங்கள் தொடர்பாகவும், மனித உரிமைகள் மீறல் தொடர்பாகவும் தமிழ் மக்கள் ஒரு சர்வதேச விசாரணையை இன்றுவரை கோரி வருகின்றனர். இந்தியா போன்ற அயல் நாடுகளும் நேரடியாகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஊடாகவும் தமிழ் மக்களின் கௌரவம் பாதுகாக்கப்படவேண்டும், சமத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும், அவர்களது அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவேண்டும் என்பதுடன், மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் சர்வதேச அரங்குகளில் சுட்டிக்காட்டி வருகின்றன. ஆனால், இலங்கை அரசோ இவற்றைக் காலதாமதப்படுத்துவதிலும் ஒத்திவைப்பதிலும் தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிக்கும் நடவடிக்கைகளிலுமே ஈடுபட்டு வருகின்றது.

ஆகவே, நாட்டின் நன்மை கருதியும் பொருளாதார அபிவிருத்தி கருதியும் இவை எல்லாவற்றுக்கும் ஒட்டுமொத்தமான தீர்வைக் காணும் முகமாக சர்வதேச விசாரணை என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஜனாதிபதியும் அரசும் இதனைப் புரிந்துகொண்டு கடமையாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்." – என்றுள்ளது.

# ரணிலுக்கு அழைப்பு விடுத்த மேற்கு வங்க முதல்வர் மமதா



வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி, டுபாய் விமான நிலையத்தில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது மேற்கு வங்க மாநில அரசு நடத்தும் சர்வதேச தொழில் முதலீட்டு மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி ரணில் பங்கேற்க வேண்டும் என மமதா பானர்ஜி அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இது தொடர்பாக மமதா பானர்ஜியின் பதிவொன்றில், “டுபாய் சர்வதேச விமான நிலையக் காத்திருப்பு பகுதியில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னைப் பார்த்தார். தம்முடன் பேச்சு வார்த்தை நடத்த அழைப்பும் விடுத்தார். அப்போது வரும் நவம்பர் மாதம் கொல்கத்தாவில் நடைபெறும் சர்வதேச தொழில் முதலீட்டு மாநாட்டில் பங்கேற்க ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்தேன். இலங்கைக்கு வருகை தர வேண்டும் என ரணில் எனக்கு அழைப்பு விடுத்தார்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# ரயில் நிலையங்களில் பொலிஸ், இராணுவம் பாதுகாப்புப் பணிகளில்

நாடளாவிய ரீதியாக உள்ள ரயில் நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது கொழும்பு கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களில் பொது மக்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதன்படி, 32 ரயில் நிலையங்களில் இராணுவத்தினர் பொது மக்களின் பாதுகாப்புக்காகக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

தேவை ஏற்படுமாயின் ஏனைய ரயில் நிலையங்களிலும் பொலிஸாரின் பாதுகாப்புக்கு மேலதிகமாக இராணுவத்தினரைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்துள்ளார்.

5 வருடங்களாகத் தாமதமாகியுள்ள தரமுயர்வை விரைவுபடுத்துதல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து ரயில் இயந்திர சாரதிகள் மேற்கொண்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நேற்று 150 ரயில் சேவைகள் இரத்தாகின.

இன்று காலை 80 அலுவலக ரயில் சேவைகளில் 40 ரயில் சேவைகள் இரத்தாகியுள்ளன என்று ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் என்.ஜே. இந்திபொல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போதைய நிலைமை தொடர்பில் ரயில் தொழிற்சங்கங்கள் இன்று மாலை கூடி கலந்துரையாடவுள்ளன.

பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தங்களது தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று ரயில் இயந்திர சாரதிகள் சங்கத்தின் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, ரயிலின் கூரை மீது பயணித்த நிலையில் ராகமை – ஹொறபே ரயில் நிலையத்தின் கூரையின் மீது மோதி உயிரிழந்த இளைஞரின் குடும்பத்துக்கு 5 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குவதற்கு போக்குவரத்து அமைச்சு அனுமதியளித்துள்ளது.

ரயில் திணைக்களத்தின் வர்த்தக பிரிவின் பிரதி பொது முகாமையாளர் சந்ர சேன பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## மோடியை ஒன்றாக...

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி., ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கே இந்தக் கடிதத்தை அவர் அனுப்பி வைத்திருக்கின்றார்.

அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:–

பிரியமான சகபாடிகளே!

தமிழ்த் தேசிய அரசியல் கட்சித் தலைவர்கள் பிரதமர் மோடியைச் சந்திக்க நேரம் ஒதுக்கக் கேட்பது பயனுள்ளதாக இருக்குமா என்று யோசிக்கின்றேன்.

அடுத்த ஆண்டு மே மாதம் அவர்களின் தேர்தல். அவர் எங்களைச் சந்திக்க சம்மதிப்பார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். நாம் டில்லி செல்ல வேண்டிய அவசியமில்லை. அவர் தென்மாநிலங்களுக்குச் செல்லும்போது அவரைச் சந்திக்கலாம்.

கஜேந்திரகுமார் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரானவர் என்ற போதிலும், அரசமைப்பில் உள்ள விதிகளை அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அவர் இந்த நேரத்தில் உணர்ந்து கொள்வார் என்று நான் நம்புகின்றேன்.

13ஆவது திருத்தம் தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்தியாவால் மட்டுமே அழுத்தம் கொடுக்க முடியும். தற்சமயம் மக்களால் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் எமக்கு இல்லாவிட்டால் அரச திணைக்களங்களை எதிர்க்க முடியாது. படைகளும் பௌத்த பிக்குகளும் தமிழர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

உங்கள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டால், அனைவரும் கையொப்பமிட்டு அனுப்பக்கூடிய ஒரு கடித நகலை நான் தயாரிக்கலாமா என்பதைத் தெரிவிக்கவும்.

கஜேந்திரகுமார் 13ஆவது திருத்தத்தின் பலனை அவர் ஏற்றுக்கொள்ளா விட்டாலும், எங்களது கூட்டு நடவடிக்கைக்குத் தனது ஒப்புதலைக் காட்டுவதற்காகவே எங்களுடன் வர முடியும்.

நாம் யாரும் மோடியைத் தனித்தனியாகச் சந்திப்பதில் பயனில்லை.

நீங்கள் ஒப்புதல் அளித்தால் சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரையும் இந்த முயற்சியில் ஈடுபடுத்தலாம்.

மூன்று நாள்களுக்குள் பதிலளிக்கவும். நன்றி! – என்றுள்ளது.

## திருவிழாவுக்கு...

வீட்டில் வசித்தோர் நேற்று நல்லூர் கோயில் சப்பரத் திருவிழாவுக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய வேளை வீட்டில் இருந்து நகை மற்றும் பணம் என்பன களவாடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பல்லாயிரக்கணக்கான...

ஆறுமுகப் பெருமான் தேர் இருப்பிடத்தை வந்தடைந்தார்.

இன்றைய தேர்த் திருவிழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

அதேவேளை, ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், நூற்றுக்கணக்கான பக்தர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூர சட்டிகள் ஏந்தியும் முருகப் பெருமானை வழிபட்டனர்.

நாளை காலை 6 மணியளவில் தீர்த்தோற்சவமும், மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது.

## வல்லிபுர ஆழ்வார்...

24ஆம் திகதி பாம்புத் திருவிழாவும், 25ஆம் திகதி கம்சன் போர் திருவிழாவும், 26 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 27ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 28ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 29ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், 30ஆம் திகதி கேணித் தீர்த்தமும் இடம்பெற்று அன்று மாலை கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவடையவுள்ளது.

ஆலய பிரதம குரு கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள திருவிழாக்களில் அடியார்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சேந்தன் தலைமையிலான குழு இன்று முதல் முன்னெடுத்து வருகின்றது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை பிரதேச சபை ஆகியன ஆலய சூழலில் பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கல் மற்றும் சுற்றுச்சூழலைத் தூய்மைப்படுத்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

அத்துடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் தனது கடமைகளை இன்றே ஆரம்பித்துள்ளனர்.



# ஜனாதிபதி வெளிநாடு புறப்பாடு; 4 பதில் அமைச்சர்கள் நியமனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில், ஜனாதிபதியின் கீழ் உள்ள அமைச்சுகளை மேற்பார்வை செய்வதற்காக இராஜாங்க அமைச்சர்கள் நால்வர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் பெண்கள், சிறுவர் மற்றும் சமூக சேவைகள் பிரதி அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பிரதி நிதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதி பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்வதற்காக நாட்டிலிருந்து புறப்பட்டுள்ளார்.

கியூபாவின் ஹவானாவில் எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடைபெறும் ஜி 77 நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் அவர் பங்கேற்க உள்ளார்.

தொடர்ந்து, 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது ஆண்டு அமர்வின் அரச தலைவர்கள் மாநாட்டில் உரையாற்ற உள்ளார்.

இதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் இன்று அதிகாலை 03.15 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து டுபாய்க்கு புறப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் டுபாயில் இருந்து பிறிதொரு விமானத்தில் அமெரிக்கா செல்ல உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 'ஸ்ரீலங்கா கிரிக்கெட்'டின் யாப்பு திருத்தம் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு இடைக்காலத் தடை

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் யாப்பு திருத்தம் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தடை உத்தரவொன்றை பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் யாப்பை திருத்துவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் எடுத்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தலைவர் மற்றும் செயலாளர் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதனடிப்படையில், இந்த மனு பரிசீலிக்கப்படும் வரை ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் யாப்பில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் சமத் மொரேஸ் ஆகியோர் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு பிறப்பித்துள்ள உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய கிரிக்கெட்டின் யாப்பில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் யாப்பு எவ்வாறு திருத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்த விதிகளுக்கு அப்பாற்பட்டு, விளையாட்டுத்துறை அமைச்சர் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் யாப்பை திருத்தியுள்ளார் எனக் குற்றம் சுமத்தியுள்ள மனுதாரர்கள், இது சட்டவிரோதமான மற்றும் தன்னிச்சையான செயல் எனவும், இந்த யாப்பைத் திருத்துவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சருக்கு அதிகாரம் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி, இந்த மனு தொடர்பான ஆட்சேபனைகளை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேபனைகளை தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் மனுதாரர்களுக்கு உத்தரவிட்டுள்ளது. இந்த மனு மீதான பரிசீலனைக்கு எதிர்வரும் ஒக்டோபர் 19 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜனநாயகமா? ஜன(விரோத)நாயகமா?

ஆட்சி முறை தத்துவங்களில் மக்களாட்சி எனப்படும் ஜனநாயக ஆட்சி முறைமையே உயர்வானது என்று சிலாகிக்கப்பட்டாலும், பெரும்பான்மையினரின் முடிவே நீதி என்ற போக்கில் வெறும் அட்சர கணித எண்ணிக்கையில் விடயங்களைத் தீர்மானிக்கும் அந்த முறைமை சிறந்ததேயல்ல, பல தேசங்களிலும் ஜன நாயகத்தின் பேரில் அநீதி தொடர்ந்து அரங்கேறுவதற்கு ஜனநாயகத்தின் இந்தப் பின்னடைவு நிலையே பிரதான காரணம் என்று கடும் விமர்சனங்கள் எழாமல் இல்லை.

இலங்கையில் கூட, வரலாற்று ரீதியில் இந்த மண்ணைப் பூர்வீகத் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் போன்ற சிறுபான்மையினர் அடக்கி, ஒடுக்கப்பட்டு இனவழிப்பு செய்யப்படுவதற்கான காப்பரணை பேரினவாதத்திற்கு வழங்கி நிற்பது ஜனநாயகத்தின் இந்த உயரிய(?) விழுமியம்தான்.

பெரும்பான்மையினரின் முடிவே தீர்ப்பு என்ற அட்டூழியகரமான நீதியே இங்கு சிறுபான்மையினம் தனது சுயத்தை இழந்து, அழிவுக்கு உட்படுத்தப்பட்டு, அவலப்பட்டு நிற்பதற்குப் பிரதான காரணம்.

பெரும்பான்மையினரின் முடிவே நியாயமான தீர்மானம் என்ற இரும்புச் சட்டக வேலியைத் தகர்க்க முடியாத கட்டுக்கோப்பாக வைத்து, அதன் மீது கட்டப்படும் பேரினவாதத்தின் கொடூரச் செயற்போக்கை எதிர்கொண்டு நிமிர்வதற்கு, அந்த உயரிய ஆட்சித் முறை தத்துவமான ஜனநாயகத்தின் வழியில் பாதைகள் இல்லை. அதனால்தான் உயரிய ஜனநாயக நாடுகள் என்று தம்மை கூறிக் கொள்ளும் பல நாடுகளில் சிறுபான்மையினரான பூர்வீக இனங்கள், ஆயுதமேந்தி போராடியாவது தங்களுக்கான நீதியை நிலைநாட்டும் வழிக்குத் தள்ளப்படும் மோசமான நிலைமை எழுகின்றது.

ஒரு நாட்டுக்குள், சிறுபான்மையின மக்களின் நீதி, நியாயமான எதிர்பார்ப்புகளை, அடிப்படை உரிமைகளை, உறுதி செய்வதற்கு வக்கற்ற ஓர் ஆட்சி முறையாக ஜனநாயகம் இருப்பதே உலகின் பல நாடுகளிலும் அதன் பின்னடைவுக்குக் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஜனநாயக ஆட்சி முறைமை என்பது உலக நாடுகளில் உள்ள ஆட்சி முறைகளில் வள்ளிசாகத் தேறக்கூடிய ஒன்று எனக் கூறலாமே தவிர, அது உயர்வான ஆட்சி முறை - மார்க்கம் - என்று கூறுவது முற்றிலும் அபத்த மானது.

பெரும்பான்மையினரின் முடிவு நியாயமான தீர்மானமா என்பதை ஆராய்ந்து முடிவு செய்யும் மேலதிக ஒரு கருவி அல்லது முறைமை பொருத்தப் பட்டால்தான் ஜனநாயகம் உயர்வானதாக கருதப்படக் கூடிய சூழல் ஏற்படும்.

ஆனால் ஜனநாயகத்தின் கீழ் தமது உயரிய ஆட்சி முறைமை என்று தங்களைத் தாங்களே சிலாகித்துப் பாராட்டி, அந்த ஆட்சி முறைமையைக் கைக்கொள்ளும் நாடுகள் பலவற்றிலும் கூட அந்த முறைமை நீதியானதாகவும் நேர்மையானதாகவும் நிலை நிறுத்தப்படவில்லை என்பது கண்கூடு.

உயரிய ஜனநாயகத்தின் பெயரால் பணநாயகமும் சர்வாதிகாரம் உறுதியாக தொடர்வதை உறுதிப்படுத்திக் காட்ட இலங்கையின் ஆட்சி முறைமை ஒன்றே போதுமானது.

# ரயில்வே திணைக்கள ஊழியர் இரத்மலானையில் படுகொலை

ரயில்வே திணைக்கள ஊழியர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இரத்மலானை, பகுதியிலுள்ள ரயில்வே ஊழியர் களுக்கான குடியிருப்பு ஒன்றிலேயே இவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார், குற்றுயிராகக் காணப்பட்ட அவரை மீட்டு களுபோவில வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். இந்நிலையிலேயே அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மாத்தறை, பயகஹா பகுதியைச் சேர்ந்த 41 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளது டன், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணை களை கல்கிஸைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதையல் தோண்டிய நான்கு பேர் கைது!

வனப்பகுதியொன்றில் புதையல் தோண்டிய நால்வர் மொரகொட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் 23, 43, 52 மற்றும் 55 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மடவளை, நாமல்புர பகுதியில் உள்ள வனப்பகுதிக்குள் புதையல் தோண்டும் போதே இந்த நால்வரும் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து புதையல் தோண்டப் பயன் படுத்தும் கருவிகள் உள்ளிட்ட பொருள்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்றில் முடிவுக்கு வந்தது குரங்குகள் ஏற்றுமதி சர்ச்சை



சட்டத்துக்கு முரணான வகையில் சீன நிறுவனம் ஒன்றுக்கு இலங்கையிலிருந்து குரங்குகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க மாட்டோம் என நீதிமன்றில் உறுதிமொழி வழங்கியதையடுத்து, அரசாங்கத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவின் விசாரணையை முடித்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஒரு லட்சம் குரங்குகளை சீன நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாகவும் இந்த நடவடிக்கையை தடை செய்யுமாறும் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணையின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள் ளப்பட்டது.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் சமத் மொராயஸ் மற்றும் நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன ஆகியோர் அடங்கிய அமர்வு இந்தத்தீர்மானத்தை அறி வித்தது.

இந்த மனு முன்னர் அழைக்கப்பட்டபோது, சட்டமா அதிபர் நீதிமன்றில் உறுதிமொழி ஒன்றை வழங்கியதுடன், இந்த நாட்டிலிருந்து குரங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு எந்தவிதமான திட்டங்களும் இல்லை எனத் தெரிவித்தார்.

# குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

குடும்பஸ்தர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லுனாவ பிரதேசத்தில் வீடொன்றின் முன்பாக நேற்று இடம்பெற்றுள்ளது.

58 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று மொரட்டுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாக்குவாதத்தின்போது அந்த நபர் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மொரட்டுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நல்லூர் உற்சவகால தெய்வீக திருக்கூட்டத் தொடர் நிகழ்வு

## 22 ஆம் நாள் செய்திக் குறிப்பு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடாத்தும் தெய்வீகத் திருக்கூட்டத் – தொடர் நிகழ்வின் 23ஆம் நாள் நிகழ்வு 11/09/2023 ஆம் திகதி திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே இடம் பெறறது.

கரவெட்டி பிரதேச அ.நெ.பாடசாலை மாணவர்கள் நிகழ்வுகளை வழங்கியிருந்தனர்.

பிரம்மஶ்ரீ AGSசுவாமிநாத சர்மா குழுவினர் வழங்கிய இசை அர்ச்சனை சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது..

அதனைத்தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.



















# வன ஜீவராசிகள், வன வளத் திணைக்களங்களிடம் சிக்கியுள்ள மக்களின் காணிகளை விடுவிக்க முயற்சி

**(என்.புவியரசன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வன ஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம் ஆகியவற்றிடம் உள்ள 78 ஆயிரத்து 227 ஏக்கர் பூமியில் பொதுமக்களின் நிலமான 12 ஆயிரத்து 480 ஏக்கரை மீள விடுவிக்குமாறு கோரப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களம் ஆகியவற்றினால் சுவீகரிக்கப்பட்ட தனியார் நிலங்களை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இவ்விவரம் தெரிவிக்கப்பட்டது.

**வன ஜீவராசிகள் திணைக்களம்**

இதற்கமைய வன ஜீவராசிகள் திணைக்களம், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில 1920ஃ3 இலக்க 22-06-2015 ஆம் திகதிய வர்த்தமானி மூலம் உரிமை கோரும் 1,846 ஹெக்டேயர் அல்லது 4,560 ஏக்கர் நிலத்தில் 1,278 ஏக்கரை விடுவிக்கக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையில் 18-05-1973 ஆம் திகதிய வர்த்தமானி மூலம் உரிமை கோரும் 20.65 ஹெக்டேயர் அதாவது 51 ஏக்கர் நிலத்தில் 10 ஏக்கரை விடுவிக்கக் கோரப்பட்டுள்ளது.

இதேபோன்று பருத்தித்தீவில் 17 குடும்பங்களில் 11 குடும்பத்திற்கான நிலம் மீள வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

மருதங்கேணி, சாவகச்சேரி, கரவெட்டி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவிலே 1956/13 ஆம் இலக்க வர்த்தகமானி மூலம் 2016-03-01 அன்று 7 ஆயிரத்து 882 ஹெக்டேயர் அல்லது 19 ஆயிரத்து 468 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டது. இதில் தனியார் காணியான 4 ஆயிரத்து 360 ஏக்கரை விடுவிக்குமாறு கோரப்பட்டது.

சுண்டிக்குளத்தில் 2015-06-22 திகதியிடப்பட்ட 1920/3 இலக்க வர்த்தமானி மூலம் 19 ஆயிரத்து 565 ஹெக்டேயர் சுவீகரிக்கப்பட்டது. இந்த 48 ஆயிரத்து 326 ஏக்கர் நிலத்திலே 5 ஆயிரத்து 620 ஏக்கரை விடுவிக்குமாறு கோரப்பட்டது.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் 72 ஆயிரத்து 406 ஏக்கர் நிலம் தற்போது உள்ளது . அதில் 11 ஆயிரத்து 269 ஏக்கர் நிலத்தைத் திரும்பப் பொது மக்களிடம் ஒப்படைக்கக் கோரினாலும் 61 ஆயிரத்து 136 ஏக்கர் நிலம் மீண்டும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஆளுகையில் தொடர்ந்தும் இருக்கும்.

**வன வளத் திணைக்களம்**

இதேசமயம் வன வளத் திணைக்களத்திடம் வேலணையில் 214ஃ35 இலக்க வர்த்தமானி மூலம் சுவீகரிக்கப்பட்ட 35.85 ஹெக்டேயர் நிலத்தில் - அதாவது 88.54 ஏக்கர் நிலத்தில் - 20.45 ஏக்கர் மீள ஒப்படைக்கக் கோரப்பட்டது. மண்டைதீவில் 2145/35 ஆம் இலக்க 2019-10-16 ஆம் திகதிய வர்த்தமானி மூலம் சுவீகரிக்கப்பட்ட 186.04 ஹெக்டேயர் அல்லது 461.98 ஏக்கர் நிலத்தில் 5.03 ஏக்கரை மீள ஒப்படைக்கக் கோரப்பட்டது.

சாவகச்சேரியல் 2145/35 இலக்க 2019-10-16 ஆம் திகதிய வர்த்தமானி மூலம் பெறப்பட்ட 87.87 ஹெக்டேயர் அல்லது 217.03 ஏக்கர் நிலத்தில் 9.5 ஏக்கர் நிலம் மீளளிக்கக் கோரப்பட்டதோடு 2145/35 இலக்க 2019-10-16 ஆம் திகதிய அதே வர்த்தமானி மூலம் சுவீகரிக்கப்பட்ட 1,598 ஹெக்டேயர் அல்லது 3,947 ஏக்கரில் 86 ஏக்கர் மீள ஒப்படைக்கக் கோரப்பட்டது

சவகச்சேரி, மருதங்கேணியில் 442.53 ஹெக்டேயர் அல்லது 1108 ஏக்கருக்கான நிலம் தொடர்பில் 2019-10-16 மற்றும் 2019-11-20 ஆகிய திகதிகளில் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டலும் அந்த அறிவித்தல்கள் திணைக்களத்திடமும் இல்லை. இந்த 1108 ஏக்கரில் 1090 ஏக்கரை விடுவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மேலதிக அரச அதிபர்கள், வன ஜீவராசி, வனவளம், நில அளவைத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

சகல திணைக்களங்களும் இணைந்து பார்வையிட்டதில் இணங்கிய அளவுகளை திணைக்களங்கள் தரவில்லை என இதன்போது யாழ் மாவட்ட அரச அதபர் சிவபாதசுந்தரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் வன ஜீவராசிகள் திணைக்களம் இதுவரை தரவில்லை. ஆனால் வன வளத் திணைக்களம் தந்துள்ளது என கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

முல்லை, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிற்கு இரு திணைக்களமும் வழங்கியபோதும் ஏன் இங்கே வழங்கவில்லையென ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் இளங்கோவன் கேள்வி எழுப்பினர்.

மாவட்டத்தில் தனியார் நிலம் என இனம் காணப்பட்டு, அனைத்துத் திணைக்களப் பிரதிநிதிகளும் கூட்டு விஜயம் மேற்கொண்டு, படம் வரைய வழங்கிய நிலங்களை விடுவிப்பது எனக் கூட்டத்தின் நிறைவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

# நீதித்துறையின் சுயாதீனத் தன்மையை நாடாளுமன்றில் கெடுக்கும் எம்.பிக்கள்

## சபாநாயகரை நேரில் சந்தித்து சட்டத்தரணிகள் சங்கம் புகார்

நீதிமன்றம், நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்குகள் மற்றும் நீதிபதிகள் தொடர்பில் முன்வைக்கப்படும் கருத்துக்களால் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீனத் தன்மைக்கு அழுத்தம் ஏற்படுவதாக சட்டத்தரணிகள் சங்கம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை சந்தித்து அறிவுறுத்தியுள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள் குழுவினருக்கும், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கும் இடையிலான சந்திப்பு திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர்கள் இது தொடர்பாகத் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நாடாளுமன்றத்திற்குள்ளும் அதற்கு வெளியேயும் குறிப்பாக தற்பொழுது சேவையாற்றிவரும் நீதிபதிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு கருத்துக்களை வெளியிடுகின்றமையைக் காணக்கூடிய தாக இருக்கிறது. இவ்வாறான நிலைமை கவலைக்குரியதாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு சபாநாயகரிடம் கோரிக்கைவிடுத்த சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், இது குறித்த எழுத்துமூல கோரிக்கையையும் சபாநாயகரிடம் கையளித்துள்ளார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நீதிபதிகள் உள்ளிட்ட நீதிமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு தான் தொடர்ந்தும் செயற்படுகிறார் எனவும் எதிர்காலத்தில் இது தொடர்பில் உறுப்பினர்களின் கவனத்துக்கு கொண்டு செல்ல எதிர்பார்க்கிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா ஜனாஸாக்கள் கட்டாயத் தகனம் அது குறித்தும் சர்வதேச விசாரணை வேண்டும்

## வற்புறுத்துகின்றார் கலீலுர் ரஹ்மான்

(நூருல் /ஹுதா உமர்)

ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொரோனா ஜனாஸாக்கள் தகனம் தொடர்பாக சர்வதேச விசாரணை அவசர தேவையாக உள்ளது. அந்தத் தேவையை நிறைவேற்றும் அதே வேளையில், 'தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு' மற்றும் 'ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு' மற்றும் 'ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு' போன்றவற்றின் அறிக்கைகளில் உள்ள அனைத்து பரிந்துரைகளையும் அரசாங்கம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அமுல்படுத்த வேண்டும் என்பதே இந்த நாட்டின் அமைதியை விரும்பும் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

மிருகத்தனமான தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரானை அரசியல் ரீதியாகப் பலப்படுத்தி, அனுசரணை வழங்கி, ஊக்கப்படுத்தியவர்கள் எனக் கூறப்படும் அரசியல் தலைவர்களை ஜாதி-மத வேறுபாடின்றி உடனடியாகக் கைது செய்ய வேண்டும். இவர்கள்



போன்றோர்களின் தைரியத்தில்தான் சஹ்ரான் போன்ற தீவிரவாத கொள்கை கொண்ட மனித மிருகங்கள் எம்மத்தியில் அச்சமின்றி நடமாடியுள்ளன என்பது கவலையளிக்கிறது.

அத்துடன் நாட்டைச் சீரழித்த பிரிவினைவாத போரின் போது முஸ்லிம்களை கொடூரமாக கொன்று குவித்த முன்னாள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து, அரசியல் பயணம் மேற்கொண்டு, ஈஸ்டர் தாக்குதல் சதி பற்றி அறிந்து அதை மூடி மறைத்து, மறைமுகமாக ஆதரித்த ஆஸாத் மௌலானா போன்றோரை உடனடியாகக் கைது செய்ய இலங்கை அரசாங்கம் சர்வதேச ஆதரவை பெற்றுக்கொள்ள வேண்டும். இவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதன் மூலமே ஈஸ்டர் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகமும், அதனால் ஒடுக்கப்பட்ட முஸ்லிம் சமூகமும் சமமாக நீதியைப் பெற முடியும்.

அது மாத்திரமின்றி கொரோனாத் தொற்று உள்ளதாக அறிவிக்கப்பட்டு எரிக்கப்பட்ட சடலங்கள் தொடர்பாகவும் சர்வதேச விசாரணை தேவை. ஏனென்றால், கொரோனாவின் சடலங்களை தகனம் செய்யும் முடிவில் அரசியல் சதித் திட்டங்கள் உள்ளன என முஸ்லிம் சமூகம் பலத்த சந்தேகம் கொண்டுள்ளது. பிச்சைக்காரனின் புண் போன்று தகனம் செய்யப்பட்ட சடலங்களை வைத்து அரசியல் செய்யும் ஒரு கும்பல் இலங்கை அரசியலில் இருப்பதால், அவர்கள் சந்தர்ப்பவாத அரசியல் செய்வதை தவிர்க்கும் விதமாக எரிக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச விசாரணை மூலம் நீதி கிடைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். .

மேற்கூறிய விடயங்களுக்கு நீதி கிடைக்காமல் விட்டால் சந்தர்ப்பவாத அரசியல் மற்றும் மதவாத சக்திகள் போன்றவை இளைஞர்களின் மன நிலையைத் தங்களின் சந்தர்ப்பவாத பேராசைக்காக பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புள்ளதாக சந்தேகிக்கிறோம். எனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்த விடயங்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கும் நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்- என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மனித உரிமைகள் தொடர்பான கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு

(த.சுபேசன்)

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படுகின்ற மனித உரிமைகள் தொடர்பான இலவச கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் இயக்குனர் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் வடபிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரஜீவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நேர்முகத்தேர்வு வாயிலாக மனித உரிமைகள் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலைய உத்தியோகத்தர்கள் போன்றோரும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.









# நல்லூரான் இரத பவனி

























# கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலய தேரோட்டம்!

(பழுவூரான், கனகராசா சரவணன்)

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு கல்லடி ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலய தேரோட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது.

மேளவாத்தியங்கள் முழங்க, வேத பாராயணங்கள் ஒலிக்க முருகப் பெருமான் அழகிய தேரிலேறி அடிய வர்களுக்கு அருள்பாலித்தார்.

இதனைக் கண்ணாரக் காண மட் டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட் டத்தின் பெரும்பாலான பகுதிகளிலி ருந்து அடியவர்கள் வருகை தந்தி ருந்தனர்.

இன்று புதன்கிழமை கல்லடி சமுத்திரத்தில் இடம்பெற்ற தீர்த்தோற்சவத்துடன் ஆலய உற்சவம் நிறைவு பெற்றது.

இவ்வாலய உற்சவம் கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமானது குறிப்பிடத்தக் கது.













# கல்முனையில் ஸ்ரீ முருகன் ரத பவனி

(பாறுக் ஷிஹான், ஏ.எல். எம்.ஷினாஸ்)

கல்முனை நகர் ஸ்ரீ முருகன் தேவஸ்தான உற்சவம் கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பமாகி இன்று புதன்கிழமை தேரோட்டம் இடம்பெற்றது.

கல்முனை முருகன் தேவஸ்த்தைத்தில் இருந்து ரதத்தில் புறப்பட்ட முருகப் பெருமான் கல்முனை நகர் வழியாக தாலவெட்டுவான் சந்தி வரைச் சென்று பக்தர்களுக்கு அருள் பாலித்தார். ஆரிய பாஷா விற்பன்னர் ஈஸான சிவச்சரியர் சிவஸ்ரீ க. கு. சாச்சிதானந்த சிவம் குருக்களின் தலைமையில் உற்சவம் நடைபெறுகின்றது.

இத்திருவிழா நாளை நடைபெறும் தீர்த்தோற்சவத்தை தொடர்ந்து கொடியிறக்கத்துடன் நிறைவு பெறவுள்ளது.











# சம்மாந்துறையில் வாய்க்கால் சிரமதானத்தில் துப்புரவுப் பணி

(பௌசுல் றிபாஸ்)

சம்மாந்துறை எஸ் 22 ஆம் வாய்க்காலின் சிரமதான நிகழ்வு நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்திற்குட் பட்ட இவ் வாய்க்கால் குப்பை, கூழங்க ளால் மூடப்பட்டு காடு வளர்ந்து காணப்பட்டது. ஹிலால் ஜும்ஆ பள்ளிவாசல் சார்பாக வாய்க்காலை சுத்தப்படுத்தித் தருமாறு நீர்பாசன பிரதேச பொறியிய லாளர் எம்.எஸ்.எம்.நவாஸிடம் விடுக் கப்பட்ட கோரிக்கைக்கமைய அவர் தலைமையிலான குழுவினர் மேற்படி வாய்காலை சுத்தம் செய்யும் சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

புளக் “ஜே“ பிரிவின் திட்ட முகாமையாளர் ஏ.எல்.ஏ.சாபிரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்ட இச் சிரமதான நிகழ்வில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய சுற்றுச் சூழல் பொறுப்பதிகாரி, பொதுச்சுகாதார பரிசோதகர்கள், சமன்ஸ் விவசாய அமைப்பின் உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிருவாகத்தினர் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழிநூட்ப உதவியாளர்கள், பராமரிப்பு ஊழியர்கள் மற்றும் பிரதேச சபை தொழினுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.எம்.முஸ்தபா மற்றும் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.












### கிளிநொச்சி பொன்னாவெளிப் பிரதேசத்தில்

# சீமெந்துத் தொழிற்சாலைக்கு எதிரான மக்களின் போராட்டம் தொடருகின்றது

(மன்னார் நிருபர்)

கிளிநொச்சி கிராஞ்சி பிரதேச செயலக பிரிவில் உள்ள பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட மக்களின் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து அமைக்கப்படவுள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு எதிராக 41 ஆவது நாளாக அப்பகுதி மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமையும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே தனியார் நிறுவனங்களால் இப்பகுதியில் அமைக்கப்பட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட கிணறுகளினாலும் குடிதண்ணீர் செயற்திட்டத்தாலும் மக்கள் குடிதண்ணீர் இன்றி அவதிப்படுகின்றனர் எனவும், தற்போது சீமெந்துத் தொழிற்சாலைக்காக இப்பகுதியில் சுண்ணக்கல் அகழ்வு இடம்பெறுவதாகவும், இதனால் நன்னீர் உவர் நீராக மாறி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் 40 நாள்களுக்கு மேலாகத் தாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், பல்வேறு பொறுப்பு வாய்ந்த அரச நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் கிளிநொச்சி அபிவிருத்திக் குழுத் தலைவரும் மற்றும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உட்பட பலருக்கு தெரியப்படுத்திய போதிலும் இதுவரை தங்கள் பகுதிக்கு அரச அதிகாரிகளோ, அமைச்சர்களோ, கிராம அலுவலரோ யாரும் வந்து சந்திக்கவோ, தங்கள் முறைப்பாடுக்கு சாதகமான பதில் வழங்கவோ இல்லை எனக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த நிலையில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் நேற்று மாலை இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை சந்தித்தமையுடன் அந்தப் போராட்டம் தொடர்பாக மக்களின் நிலைப்பாடு குறித்தும் அறிந்து கொண்டனர்.

எனினும் தமக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.











# திடீரென மாயமான இராணுவ அமைச்சர்!

## - சீனாவில் பெரும் பரபரப்பு

சீன இராணுவ அமைச்சர் லீ ஷாங் பூ திடீரென மாயமான சம்பவம் அந்த நாட்டு அரசியலில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஜூலை மாதம் சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த குயின் கேங் திடீரென மாயமாகி பொது நிகழ்ச்சிகளை தவிர்த்து வந்தார்.

இதனையடுத்து சீனாவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக வாங் யீ என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் நேற்று சீன இராணுவ அமைச்சர் லீ ஷாங் பு திடீரென மாயமாகியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இவர் கடந்த 15 நாட்களாக பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை எனவும், அரசு நிர்வாக விடயங்களை இவர் தொடர்ந்து தவிர்த்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக ஜனாதிபதியின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று முக்கிய முடிவு எடுக்க வேண்டிய இராணுவ அமைச்சர் திடீரென மாயமாகியுள்ளமை சீன அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# முவாயிரத்தை கடந்தது மொராக்கோ உயிரிழப்புகள்!



மொராக்கோவில் கடந்த 8 ஆம் திகதி நள்ளிரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை முவாயிரத்தை கடந்துள்ளது.

அந்த நாட்டின் சுற்றுலா நகரமான மராகெச் அருகே அட்லஸ் மலையில் பூமிக்கு அடியில் 18.5 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டு உண்டான நிலநடுக்கம், ரிக்டர் அளவில் 6.8 ஆக பதிவானது.

தொடர்ந்து, 19 நிமிடங்களுக்கு பின்னர் மீண்டும் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் மராகெச் மற்றும் அங்குள்ள மலை கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. அடுக்குமாடி குடியிருப்புகள், வீடுகள் மற்றும் பல கட்டடங்கள் மற்றும் ஆயி ரக்கணக்கான வீடுகள் இடிந்து தரை மட்டமாகின.

கட்டட இடுபாடுகளில் இருந்து உடல்கள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருவதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தவாறு உள்ளது.

நிலநடுக்கத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் மேல் இருக்கலாம் என முதல் நாளில் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், நிலநடுக்கத்தால் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களின் தற்போது எண்ணிக்கை 3000 தாண்டியுள்ளதாக மொராக்கோ உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் இதில், 2500 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புறாக்களின் எச்சத்தால் சூழப்பட்ட வீடு!



பிரித்தானியாவில் லண்டன் நகரில் உள்ள வீடொன்று புறாக்களின் எச்சத்தால் சேதமடைந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அந்த வீட்டின் உரிமையாளர், வாடகைக்குக் கொடுத்த தனது வீட்டை பார்வையிடச் சென்றுள்ள நிலையில் அந்த வீடு முழுவதும் புறாக்களின் எச்சத்தால் மூடப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தவர்கள் அந்த வீட்டை வீட்டுவிட்டுச் சென்றுள்ள நிலையிலேயே புறாக்கள் அந்த வீட்டை தமது கட்டுப் பாட்டுக்குள் எடுத்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை தமிழக அரசு உடனடியாக கூட்ட வேண்டும்!

## - பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தல்



காவிரி பிரச்சினை தொடர்பில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து விவாதிப்பதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை தமிழக அரசு உடனடியாக கூட்ட வேண்டும் என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழகத்தில் கருகும் நிலையில் உள்ள பயிர்களைக் காக்க வினாடிக்கு 5000 கன அடி வீதம் 15 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழு கர்நாடக அரசுக்கு ஆணையிட்டிருக்கிறது. இந்த நீர் தமிழகத்திற்கு போது மானதல்ல என்றாலும் கூட, அதைக் கூட தமிழகத்திற்கு திறந்து விட முடியாது என்று கர்நாடக முதல்வர் சித்தராமய்யாவும், துணை முதல்வர் டி.கே.சிவக்குமாரும் அறிவித்துள்ளனர்.

கர்நாடக அரசின் இந்த நிலைப்பாடு கண்டிக்கத்தக்கது. காவிரி நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவை அளித்த தீர்ப்புகளின் அடிப்படையில் தமிழகத்துக்கு கர்நாடக அரசு இன்று வரை 102.30 டி.எம்.சி தண்ணீர் வழங்கியிருக்க வேண்டும். ஆனால், கர்நாடகம் இதுவரை 35 டி.எம்.சி தண்ணீரைக் கூட வழங்கவில்லை.

இவ்வளவு தண்ணீரை வைத்துக் கொண்டு தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க கர்நாடகம் மறுப்பது இரு மாநில உறவுகளுக்கும், கூட்டாட்சி தத்துவத்திற்கும் வலிமை சேர்க்காது. காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விட முடியாது என்று அறிவித்து விட்ட கர்நாடக முதல்வர் சித்தராமய்யா, அந்த முடிவின் பின்னணியில் ஒட்டு மொத்த கர்நாடகமும் ஒன்றாக இருக்கிறது என்பதை உலகிற்கு காட்டுவதற்காக இன்றைக்கு அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டியிருக்கிறார்.

இந்த நிலையில், காவிரி விவகாரத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளன என்பதை ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் தெரிவிக்க வேண்டிய கடமையும் தமிழக அரசுக்கு உள்ளது.

எனவே, அதற்காகவும், காவிரி சிக்கலில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து விவாதிக்கவும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை தமிழக அரசு உடனடியாக கூட்ட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# தமிழகத்தில் 2026 இல் பா.ம.க ஆட்சியமைக்கும்!

## - அன்புமணி ராமதாஸ் நம்பிக்கை



தமிழகத்தில் 2026 ஆம் ஆண்டில் பா.ம.க. ஆட்சியமைக்கும் என்று அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் பா.ம.க. சார்பில் தருமபுரி சட்டப் பேரவை தொகுதி களப் பணியாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் பங்கேற்று உரையாற்றுகையில், வரவுள்ள மக்களவைத் தேர்தலுக்கு பாமக இப்போதே தயாராக இருக்கிறது. இருப்பினும், கட்சியினர் தேர்தலுக்கான களப்பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டும். வாக்காளர்களை தொடர்ந்து சந்திப்பதன் மூலம் தான் அவர்களின் ஆதரவைப் பெற முடியும்.

தருமபுரி மக்களவைத் தொகுதியில் கடந்த தேர்தலில் பா.ம.க. ஏன் வெற்றி வாய்ப்பை இழந்தது என அறிந்து அதற்கேற்ப செயல்பட வேண்டும். வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் தருமபுரி தொகுதியில் பா.ம.க போட்டியிடும். பா.ம.க. இல்லையெனில் தமிழகத்தில் சாராயம் ஆறாக ஓடும். மதுவுக்கு எதிரான தொடர் போராட்டம் மூலம் தமிழகத்தில் முழுமையான மது விலக்கை கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்வோம்.

தமிழகம் முழுவதும் கட்சி நிர்வாகிகள் மற்றும் வாக்காளர்களை சந்தித்து வருகிறேன். அப்போது, மக்களின் மனங்களில் ஏற்பட்டு வரும் பெரிய மாற்றத்தை உணர முடிகிறது. அதன்படி, வரும் 2026 சட்டப் பேரவை தேர்தலில் வெற்றி பெற்று தமிழகத்தில் பாமக ஆட்சியமைக்கும். இந்த வெற்றிக்கு செயலாற்ற நாம் அனைவரும் தயாராக வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# ராஜஸ்தானில் பேருந்து விபத்து: 11 பேர் பலி!



இந்தியாவின் ராஜஸ்தான் மாநில நெடுஞ்சாலை ஒன்றில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

நெடுஞ்சாலையில் சென்ற பேருந்து மீது ட்ரக் ரக வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ராஜஸ்தானின் புஷ்கரில் இருந்து உத்தரபிரதேசம் நோக்கி பயணித்த பேருந்து இன்று அதிகாலை 4.30 மணியளவில் விபத்துக்குள்ளாகியுள்ளது. எரிபொருள் தீர்ந்ததால், லகான் பூரில் உள்ள ஆந்த்ரா மேம்பாலம் அருகே பேருந்து நிறுத்தப் பட்டபோது, பின்னால் இருந்து வந்த ட்ரக் ரக வாகனம் பேருந்து மீது மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.

குறித்த விபத்தில் 5 ஆண்களும், 6 பெண்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.